**<u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை</u>**

**<u>OS.NO.253/2014</u>** **தேதி.08.03.2024**

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... பி.வா.சா.1 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2024 ம் ஆண்டு 08.03.2024 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | விநாயகம் |
| த/பெ. | : | சண்முகம் |
| வயது | : | 68/2024 |
| தொழில் | : | விவசாயம் |
| இனம் | : | ஆண் |
| கிராமம் | : | பூண்டி |
| வட்டம் | : | வாலாஜா |
| மாவட்டம் | : | இராணிபேட்டை |

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–

தாவா சொத்தின் அயிட்டம் எண் 18 சர்வே நெ.697/5 என் அம்மா பெயரில் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி சொத்து குறித்த பத்திரத்தை வாதி மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். சர்வே நெ.697/5 என் பெயரில் உள்ளதா நான் சாட்சியில் சொல்லியிருந்தால் அது தவறு என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் அயிட்டம் நெ.19 முதல் 24 வரை உள்ள சொத்துக்கள் சம்பந்தமாக வாதி கணேசன் தான் கிரைய ஒப்பந்தம் போட்டார் என்றால் சரியல்ல. சாட்சி தற்போது கிரைய ஒப்பந்தம் போட்டார் என்றும் அதை விட்டுவிட்டார் என்றும் கூறுகிறார். வாதி கணேசன் போட்ட கிரைய ஒப்பந்தம் **வா.தா.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியும். **வா.தா.சா.ஆ.13 ல்** கிரைய ஒப்பந்தத்தை புதுப்பிப்பதற்காக செல் வைத்துள்ளார் என்று சொன்னால் அது பொய்யானதாகும். வாதியின் பங்கை அபகரிப்பதற்காக நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அயிட்டம் நெ.19 முதல் 24 வரை உள்ள

சொத்துக்கள் என் மற்றும் வாதியின் தாயார் லட்சுமி அம்மாள் பெரிலும் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. லட்சுமி அம்மாள் பெயரில் உள்ள சொத்து பொதுவாக உள்ளது என்றும் அதனை அபகரிக்க நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அயிட்டம் நெ.19 முதல் 24 வரை உள்ள சொத்தின் பத்திர எண் 1466/1995 என்று சொன்னால் எண் தெரியாது நான்தான் வாங்கி என் அம்மா பெயரில் எழுதினேன். எனக்கு தற்போது 68 வயதாகிறது. 1995ல் எனக்கு என்ன வயது என்று எனக்கு தெரியாது. 1995ல் எனக்கு 30 வயது என்றும் அப்போது நான் சம்பாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அயிட்டம் நெ.19 முதல் 24 வரை உள்ள சொத்துக்களை வாதிதான் வாங்கினார் என்றும் யூனியன் டிரஸ்ட் ஆப் இந்தியாவில் கடன் வாங்கி வாதியின் தாயார் பெயரில் எழுதினார் என்று சொன்னால் சரியல்ல. அது சம்பந்தமாக லோன் கடவுச்சீட்டை இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டள்ளது தவறானதாகும். குடும்பத்தில் மூத்தவர் வாதி கணேசன் ஆவார். என் தகப்பனார் சண்முகம் எப்போது இறந்தார் என்றால் எனக்கு நினைவு தெரியாத வயதில் இறந்துவிட்டார். என் குடும்பத்தில் எனக்கு முன்னதமாகவே என்னுடைய பெரிய அண்ணன் வேலைக்கு சென்றுவிட்டார் என்றால் சரிதான். நான் விவசாயம் செய்திருந்தேன். நான் 5 வயதிலிருந்து 15 வயது வரை வள்ளிமலை பக்கத்தில் உள்ள என் பாட்டி தேவயானி வீட்டில் வளர்ந்தேன் அங்குதான் நான் படித்தேன். நான் பூண்டியில் இருந்ததாக முதல் விசாரணையில் பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல நான் அடிக்கடி வந்து போவேன். வாதி கணேசன் பிறந்ததிலிருந்து அவருடைய அம்மாவுடன் இருந்தார் என்றால் சரிதான். வாதியானர் பஸ்சில் கண்டெக்டர் வேலை செய்வதற்கு முன்பு விவசாயம் செய்து அவருடைய தாயார் பெயரில் சொத்து வாங்கினார் என்றால் சரியல்ல. (கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)